திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : விவசாய இலாகாவே வாழை, திராட்சை போன்ற விவசாயங்களைச் செய்தால் ஏராள மான வருமானம் வரும் என்று பிரசாரம் செய்கிறார்கள். தானியத்திற்கு இன்று அராங்கம் கொடுக்கிற விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த விலைக்குக் கொள்முதல் செய்தால், அசலாவது கிடைக்குமா என்று சிந்தித்துப் பார்த்து நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா? எந்தக் காலத்தில் இந்த விலை நிர்ணயம் செய்யப்பட்டது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஒன்றை எல்லோரும் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். விலையை நிர்ணயிப்பது அக்ரிகல்சரல் ப்ரைஸ் கமிஷன் என்று. நம் நெல் விலையை, எல்லா மாநிலங் களிலும் மத்திய அரசுதான் நிர்ணயிக்கிறது. அதற்கு மேல் கொஞ்சம் போக வேண்டுமென்று நாம் நினைத்துத் தந்திரமான முறையில் விலையைக் கூட்ட வேண்டுமானால் போனசாகவும், இன்சென்ட்டிவ் போனசாகவும் கொடுத்து வருகிறோம். விலை நிர்ணயம் செய்தது முதலில் ஒரு தடவை 1964-ல், பிறகு 1966-ல் இரண்டாவது முறையாக விலை நிர்ணயிக்கப்பட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் குறிப்பிட்டபடி மத்திய அரசாங்கத்திலிருந்து மாநிலத்திற்கு ஒரு க்வின்டால் நெல்லுக்குக் கூடுதல் நான்கு ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சிபார்சு செய்திருப்பதாக அறிகிறோம். அது சர்க்காருக்குத் தெரியுமா ? மேற்கு வங்காளத்தில் க்வின்டாலுக்கு 52 ரூபாய் வீதம் கொடுத்து வந்தது 60 ரூபாயாக்கப்பட்டு அதன் படி விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருவதும் சர்க்காருக்குத் தெரியுமா ? அப்படித் தெரிந்தால் மேற்கு வங்காளத்தில் கொடுக் கும் நிலை போன்று இந்தச் சர்க்காரும் விவசாயிகளுக்குக் கொடுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : முதலிலேயே தெளிவாகச் சொன்னேன். அங்கத்தினர் அவர்கள் சொல்லும்படியான எந்தத் தகவலும் இந்த அரசாங்கத்தின் வசம் இல்லை.

திரு. ஆர். நாகசுந்தரம் : ஐயா, சொந்த உபயோகத்திற்காக நபருக்கு 10 படி அரிசி கொண்டு போகலாம் என்றிருக்கும் சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு ஏராளமானவர்கள் ஒரு பெரிய கும்பலாக திருச்சி—கரூர் மார்க்கம் போகும் ரெயில் வண்டி களில் இரவு நேரத்தில் கள்ளக் கடத்தல் செய்யும் காரியத்தில் ஈடு பட்டிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது மாதிரியான தகவல் அரசாங்கத்திற்கு இல்லை. அங்கத்தினர் அவர்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகள் இப்படிப்பட்ட கெடுதலான காரியங்களைத்

1967 ஜூன் 26]

தடுத்து நிறுத்துவதற்கு அப்படிப்பட்ட காரியங்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால் தக்க துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

DR. H. V. HANDE : According to the Minister, the price was fixed in 1965. During the last two years the prices of oil cakes, bullocks and fertilisers have gone up very high and fertiliser is not available in the open market. The cost of production has gone up within these two years. The Minister has said that the Central Government have fixed the price. In view of the situation in the Madras State, will this Government come forward as a special case to subsidise the procurement price? Bonus does not reach the small farmers; it reaches only the big farmers. Will the Government re-examine the entire question and give an incentive to the farmers so that they may not come to the Madras City?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : *இப் பிரச்னையை மீண்டும் பரிசீலனை செய்வதல்ல இன்றுள்ள நிலைமை. நம் மாநிலத்தில் பெரும்பாலானவர்கள் இதை ஒரு வியாஜ்யமாக்கிச் சொல்கிறார்களே தவிர நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலை நியாயமானது என்பதை அதிக விளைச்சல் உள்ள தஞ்சை மாவட்ட விவசாயிகளே மிகப் பெரும்பாலானவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். வேறு சில மாவட்டங்களில் விலை ஏற்ற இறக்கத்தில் வித்தியாசப்படுவது உண்மையே. அது ரொம்பக் குறைவாக நெல் பயிரிடப்படுகிற இடத்திலே தானே தவிர பெரும்பாலான விளைச்சல் உள்ள இடங்களில் அல்ல. நான் தஞ்சை மாநில விவசாய மாநாட்டில் கலந்து கொண்டேன், அதில் பெருத்த குறைபாடு அல்லது மனக்குறைவு இருப்பதாக இந்த அரசாங்கம் கருதவில்லை.*

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : *இரண்டு மாதங்களுக்கு முன்னால் சென்ட்ரல் கவர்ன்மென்ட் ரசாயன உரங்களின் விலையை ஏற்றியிருக்கிறது. அதனால் உற்பத்திச் செலவும் மிக மிக அதிகமாகி இருக்கிறது. ஆகவே அக்ரிகல்ச்சுரல் ப்ரைஸ் கமிஷனை, விலையை ஏற்றித் தரும்படி இந்த அரசு வற்புறுத்துமா?*

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : *மத்திய அரசாங்கம் இம்மாதிரி ரசாயன உரத்திற்கான விலையை ஏற்றியதல்லாமல் போனஸையும் எடுத்ததற்காக இந்த அரசாங்கம் அவர்களுக்கு ஆட்சேபம் தெரிவித்து இருக்கிறது. இதனால் தமிழகத்தின் உற்பத்தித் திறன் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அவர்கள் கவனத்திற்கு ஏற்கனவேயே கொண்டு வந்திருக்கிறது.*

THIRU R. PONNAPPA NADAR : Sir, has any proposal been placed before the Agriculutral Prices Commission by this Government and if so, will the Government give its details?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I want notice.